செய்தி வெளியீடு எண்:1001 நாள்:01.11.2021

## செய்தி வெளியீடு

### கிண்டி, மடுவின்கரை சென்னை மாநகராட்சிப் பள்ளியில் மீண்டும் பள்ளிக்கு வருகை தந்த மாணவச் செல்வங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வரவேற்றார்.

மிக நீண்ட நாளைக்குப் பிறகு பள்ளிக்கு ஆர்வத்துடன் வரும் குழந்தைகளுக்கு உற்சாகமூட்டும் வகையிலும், நம்பிக்கை ஊட்டும் வகையிலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்பது அனைவரின் கடமை. எனவே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர் கழக நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் நேசமுடன் மாணவர்களை வரவேற்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளுக்கு வருகை தந்த மாணவச் செல்வங்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று (1.11.2021) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வேளச்சேரி மேம்பாலத்தை திறந்து வைத்து, பின்னர், மடுவின்கரை சென்னை மாநகராட்சிப் பள்ளிக்குச் சென்றார். அங்கு மீண்டும் பள்ளிக்கு வருகை தந்த மாணவச் செல்வங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, அன்புடன் வரவேற்று

அவர்களுக்கு இனிப்புகள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கி வாழ்த்தி உரையாடினார்.

மாணவச் செல்வங்கள் மற்றும் ஆசிரியர்களிடம் உரையாடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கல்வியில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்றும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறும் அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை ஆணையர் திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப., தலைமை ஆசிரியர் திருமதி ஷியாமளா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.............

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9